மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : வருவாய்த்துறை ஒரு பகுதியாகவும், வளர்ச்சித்துறை ஒரு பகுதியாகவும் இருக்க வேண்டுமென்ற கருத்து அந்த மகாநாட்டில் கலந்துகொண்டவர்களாலும், மற்றவர்களாலும் தெரிவிக்கப்பட்டது. கொள்கை அளவில் அதை ஏற்றுக்கொண்டு, அதைப்பற்றி ஆராய நிர்வாகச் சீர் அமைப்புக் குழுவினர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர்களது அறிக்கை வந்த பிறகு மேற்கொண்டு அதுபற்றி முடிவு மேற்கொள்ளப்படும்.

Widening of Ramakrishna Mutt Road

* 163 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) the total area acquired from private parties for the widening of the Ramakrishna Mutt Road, Mylapore, Madras near Luz; and

(*b*) the details of the compensation paid therefor?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஐந்து மனைகளும் 709 சதுர அடியும் கையகப்படுத்தப்பட்டன.

(இ) பேரவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளன.

நகரப் பஞ்சாயத்துக்களுக்கு துப்புரவு ஆய்வாளர்கள்

* **164. வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா?

மேஜர் பஞ்சாயத்துக்களுக்கு சானிடரி இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம்.

திரு. என். கிட்டப்பா : அது எப்போது முதல் செயல்பட இருக்கிறது என்பதுபற்றி அரசு அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நமது மாநிலத்தில் 112 துப்புரவாய்வாளர்கள் ஊராட்சி, நகராட்சி ஒன்றியங்களில் பணிபுரிந்து வருகிறார்கள். எந்த எந்த ஊராட்சிகளில் துப்புரவு ஆய்வாளர்கள் இல்லையோ

@ 296–299-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.